# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

# தமிழ்

## ஆசிரியர் கையேடு

## தொடக்க வகுப்புகள்

## I - V

## முதல்பருவம்

உருவாக்கம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

சென்னை – 600006

www.TeacherTN.com

© STATE COUNCIL OF EDUCATIONAL RESEARCH AND TRAINING, CHENNAI-6
2012

## குழுத்தலைவர்

**திரு. கு. தேவராஜன்,**
**இயக்குநர்,**
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600006.

## மேலாய்வாளர்கள்

**முனைவர் திரு. மு. பழனிச்சாமி,**
இணை இயக்குநர் (திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600006.

**முனைவர் திரு. ச. கண்ணப்பன்,**
இணை இயக்குநர் (நிருவாகம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை–600006.

## ஒருங்கிணைப்பாளர்

**திருமதி க. சு. சங்கீதா**
உதவிப்பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600006.

## நூலாசிரியர்கள்

**முனைவர் வெ. உஷாராணி,**
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
கிருஷ்ணகிரி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**திருமதி அ. மணமலர்ச்செல்வி,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர்,
அரியலூர்&பெரம்பலூர் மாவட்டம்.

**செல்வி ப. சுஜாதா,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
தே.கல்லுப்பட்டி,
மதுரை மாவட்டம்.

**திருமதி ஜெ. இந்துமதி,**
இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ.தொ. பள்ளி,
மழையூர்,
திமிரி,
வேலூர் மாவட்டம்.

**திரு. க. உதயகுமார்,**
தலைமை ஆசிரியர் ,
ஊ..ஒ.தொ. பள்ளி,
சின்னகொண்டலாம்பட்டி,
பனமரத்துப்பட்டி,
சேலம் மாவட்டம்.

**திரு. ஆ. போ. ஜானகிராமன்,**
தலைமை ஆசிரியர்,
ஊ.ஒ.தொ. பள்ளி,
மகமது பேட்டை ,
திமிரி,
வேலூர் மாவட்டம்.

www.TeacherTN.com

**கு. தேவராஜன்,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600006.

## அணிந்துரை

***கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை. . .***

தரமான கல்வி நோக்கிய தமிழக அரசின் இலக்கில் முன் முயற்சியாக முப்பருவக் கல்வி முறையும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடும் வரும் கல்வியாண்டு முதல் (2012–2013) தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் முதல் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இந்தியாவில் முதன்முறையாக முப்பருவக் கல்விமுறையைத் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அறிமுகப்படுத்துகிறது. இந்தப் பெருமிதத்துடன் முப்பருவக் கல்விமுறைக்கான வழிகாட்டு நெறிமுறைகள், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுமுறைக்கான வழிகாட்டுக் கையேடு, அனைத்துப் பாட ஆசிரியர் கையேடுகள் ஆகியனவற்றை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இவ்வாசிரியர் கையேட்டில், மாணவர்களை மதிப்பீடு செய்யும் பாடநூல் செயல்பாடுகள் விளக்கப்படுவதோடு, மாணவர்களிடமுள்ள திறன்களை முழுமையாகத் தரஅளவீடு செய்வது எவ்வாறென ஆசிரியருக்கு வழிகாட்டுகிறது. இதன்மூலம் மாணவனுள் பொதிந்துள்ள ஒரு திறன் மட்டுமல்லாது பன்முகத்திறன்களும் வெளிக்கொணரப்படும். மேலும், மாணவனின் தனித்திறன்களை அடையாளங்கண்டு (ஆண்டு முழுவதும்) பருவந்தோறும் தொடர்ந்தும் முழுமையாகவும் மதிப்பீடு செய்ய ஆசிரியருக்கு உறுதுணையாகத் திகழ்கிறது.

இப்புதிய மதிப்பீட்டு முறையினால், மாணவரின் கல்விச் செயல்பாடுகளும், கல்வி இணைச் செயல்பாடுகளான உடற்கல்வி, யோகக்கலை, நன்னலம், வாழ்வியல் திறன்கள், மனப்பான்மைகள் மற்றும் மதிப்புகள் என அனைத்துக் கூறுகளும் அளவிடப்படுகின்றன. இவ்வாறு அளவிடுவதன் மூலம் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியை முழுமையாக அறியமுடிகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளின் கற்றல் இயல்பு மற்றும் வேகத்திற்கு ஏற்ப மதிப்பிடுவதற்கான நெகிழ்வுத்தன்மைகளும் விளக்கப்படுகின்றன.

காலந்தோறும் கற்றல்முறைகளில் செய்யப்பட்டு வரும் மாற்றங்களையடுத்துத் தற்போது மதிப்பீட்டு முறையிலும் புதிய மாற்றம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய மதிப்பீட்டுமுறை ஆசிரியர்களை ஊக்குவிப்பதோடு மாணவர்களையும் தேர்வு பற்றிய மன அழுத்தத்திலிருந்து விடுவித்து மேம்படுத்தும்; மகிழச் செய்யும்!

ஆசிரியர்கள், கையேட்டிலுள்ள கருத்துகளை முழுமையாக உள்வாங்கிக்கொண்டு வகுப்பறையில் செயல்படுத்துதல் வேண்டும். அப்போதுதான் இளந்தலைமுறையினரை ஆளுமைமிக்கவர்களாகவும் தன்னம்பிக்கை உடையவர்களாகவும் வருங்காலத்தை வடிவமைப்பவர்களாகவும் உருவாக்க இயலும். இந்தியாவின் முன்னேற்றம் நான்கு சுவர்களுக்குள்ளே உருவாகிறது என்பதனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட கடமையினை அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் செயல்படுத்தவேண்டுமென விழைகிறேன்.

**வாழ்த்துகளுடன்**

**இயக்குநர்.**

www.TeacherTN.com

# பொருளடக்கம்


| வ.எண். | விவரம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | மொழிப்பாடமும் மதிப்பீடும் | 1 |
| 2 | தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு | 2 |
| 3 | வளரறி மதிப்பீடு | 2 |
| 4 | வளரறி மதிப்பீட்டுச்செயல்பாடுகள் | 3 |
| 5 | வளரறி மதிப்பீடு – அ | 4 |
| 6 | வளரறி (அ) செயல்பாடுகள்– மதிப்பீட்டு முறைகள் | 5 |
| 7 | வளரறி மதிப்பீடு – ஆ | 11 |
| 8 | குறைதீர் கற்பித்தல் | 12 |
| 9 | தொகுத்தறி மதிப்பீடு | 12 |
| 10 | மதிப்பெண் மற்றும் தரம் – பதிவேடுகளில் பதிவு செய்தல் | 13 |
| 11 | மாற்றுத்திறனாளருக்கான மதிப்பீட்டு நெறிமுறைகள் | 14 |
| 12 | குறைந்த பட்ச கற்றல் இலக்குகள் – முதல் பருவம் | 15 |
| 13 | வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள் | 17 |
| 14 | பாடநூல் செயல்பாடுகள் பட்டியல்<br>(வளரறி மதிப்பீடு – அ , வளரறி மதிப்பீடு – ஆ) | 22 |
| 15 | தொகுத்தறி மதிப்பீடு – வினாத்தாள் திட்ட வரைவு (மாதிரி) | 39 |
| 16 | மாதிரி வினாத்தாள் தொகுப்பு– (வகுப்பு வாரியாக) | 41 |
| 17 | பாடப்பகுதிகளும் கல்வி இணைச்செயல்பாடுகளும் | 56 |
| 18 | முதல் பருவ இறுதியில் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன் பட்டியல்–(வகுப்பு வாரியாக) | 57 |
| 19 | காலஅட்டவணை (மாதிரி) | 58 |


www.TeacherTN.com

# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

**மொழிப்பாடமும் மதிப்பீடும்**

மொழிப்பாடம் என்பது ஒரு திறன் பாடம். மொழிப்பாடத்தின் வாயிலாகக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், நடைமுறை இலக்கணம், தானே கற்றல், சொற்களஞ்சியப் பெருக்கம் முதலிய திறன்கள் வளர்த்தல் வேண்டும். இத்தகைய திறன்களை வளர்க்கும் நோக்கிலேயே மொழிப்பாட நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மொழிப்பாடங்களில் இடம்பெறும் பாடப்பொருள், மொழித்திறன்களை வளர்க்கப் பயன்படுகிறது. எனவே, மொழிப்பாடத்தில் மதிப்பீடு என்பது பாடப்பொருளறிவை மதிப்பிடுவதாக அமையாமல், அப்பாடப்பொருள் வாயிலாகக் கற்ற மொழித்திறன்களை மதிப்பிடுவதாகவே அமைதல் வேண்டும். மொழிப்பாடமல்லாத பிற பாடங்களான கணக்கு, அறிவியல், சமூகஅறிவியல் முதலிய பாடங்கள் அறிவுசார்ந்த பாடங்களாகும். அறிவுசார்ந்த பாடங்களைப் பொருத்தவரை பாடப்பொருளே அடையவேண்டிய திறனாகவும், திறனே பாடப்பொருளாகவும் அமைந்துள்ளதனால், மாணவர் பாடப்பொருளடைவு பெற்றுள்ளனரா என மதிப்பீடு செய்வதும் திறனடைவை மதிப்பீடு செய்வதும் ஒன்றே.

மொழிப்பாடத்தில் பாடப்பொருளறிவை மதிப்பீடு செய்வதென்பது, மொழித்திறன்களை மதிப்பீடு செய்வதாகாது. இத்தகைய வேறுபாடு காரணமாக மொழிப்பாடம் பிற பாடங்களைக் கற்பிப்பதிலிருந்தும் மதிப்பீடு செய்வதிலிருந்தும் மாறுபடுகிறது. இவ்வேறுபாட்டை உணர்ந்து மொழிப்பாடத்தை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

எழுத்துத்தேர்வு முறையில் பேசுதல், படித்தல் முதலிய மொழித் திறன்களை மதிப்பிட வாய்ப்பில்லை. எவற்றை மதிப்பீடு செய்கிறோமோ அவற்றைக் கற்பிக்கவே வகுப்பறையில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மதிப்பீட்டில் பேசுதல், படித்தல் முதலிய திறன்களை மதிப்பிட வாய்ப்பில்லாதபோது, வகுப்பறைக் கற்பித்தலிலும் இத்திறன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை.

மேலும், மாணவர்கள் திறனடைவு பெறாதபோது குறையறியவோ, குறைதீர் கற்பித்தலை மேற்கொள்ளவோ மீண்டும் திறனடைவு பெறச்செய்யவோ வாய்ப்புக் குறைவு. எனவே, மாணவர்கள் பேசுதல், படித்தல் முதலியவற்றில் தேவையான திறன்களை அடையாமலேயே உயர்வகுப்புகளுக்குச் சென்று விடுகிறார்கள்.

## தமிழ்ப்பாடமும் – தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடும்

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் மாணவர்களிடம் பொதிந்துள்ள திறன்களைத் தொடர்ச்சியாகவும், முழுமையாகவும் மதிப்பீடு செய்ய முடியும். தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதனால், எவ்வெவ்விடங்களில் மாணவர்கள் திறனடைவு பெறவில்லையோ அவ்வவ்விடங்களில் குறைகளைக் கண்டறிந்து குறைதீர் கற்பித்தல்மூலம் திறன்களைப் பெறச்செய்யலாம். குறிப்பாக, மொழிப்பாடத்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், நடைமுறை இலக்கணம், தானே கற்றல், சொற்களஞ்சியப் பெருக்கம் முதலியவற்றைக் கற்பிக்கவும் மதிப்பிடவும் வாய்ப்புள்ளது. கல்வி இணைச்செயல்பாடுகளான


www.TeacherTN.com

வாழ்க்கைத் திறன்கள், மதிப்பும் மனப்பான்மையும், நன்னலம், யோகா/முழு உடற்பயிற்சி, பாட இணைச் செயல்பாடுகளான மரபுக் கலைகள் மற்றும் விளையாட்டுகள், மன்றச் செயல்பாடுகள் முதலியவற்றில் மாணவர்கள் திறன் பெறவும் அவற்றை மதிப்பீடு செய்யவும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை வாய்ப்பளிக்கிறது.

## தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு
## (CONTINUOUS AND COMPREHENSIVE EVALUATION)

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது கற்போரின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உள்ளடக்கிய அணுகுமுறை. இது கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளை உள்ளடக்கிய பள்ளி அளவிலான மதிப்பீடு.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு இரு வகைகளில் மேற்கொள்ளப்படும்.**

1. **வளரறி மதிப்பீடு ( Formative Assessment)**
2. **தொகுத்தறி மதிப்பீடு (Summative Assessment)**

### வளரறி மதிப்பீடு - Formative Assessment (FA)

வளரறி மதிப்பீடு என்பது, மாணவர்களின் கற்றலைக் **கல்விசார் மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளைப்** பள்ளிச்சூழலிலும் வகுப்பறையிலும் பல்வேறு கற்றல் சூழலிலும் ஆசிரியர் தொடர்ந்து மதிப்பீடு செய்வதாகும்.

இம்மதிப்பீடானது,

- ❖ கற்றல் நடைபெறும்பொழுது செய்யப்படுவது.
- ❖ ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கிறது. மாணவர்களின் பல்வேறு கற்றல் நிலைகளை (பார்த்து, கேட்டு, செய்தும் கற்றல்) ஆசிரியரால் உற்றுநோக்கி மதிப்பிடுகிறது.
- ❖ மாணவர்களின் கற்றலைத் தூண்டுவதோடு ஆசிரியரையும் ஊக்குவிக்கிறது.
- ❖ மாணவர்களின் தேவையை அடையாளம் காண்பதற்கும், முன்னேற்றம் அடையச் செய்வதற்கும் உதவுகிறது.
- ❖ வகுப்பறையில், கற்றல் செயல்பாடுகள் மதிப்பீடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு வழிவகுக்கிறது.
- ❖ தன்னுடன் பயிலும் மாணவர்களுக்குக் கற்றலில் உதவ வழி செய்கிறது.
- ❖ கற்றல் குறைபாட்டிற்கான காரணத்தை ஆராய்ந்து, அதற்குத் தீர்வு காண்கிறது.
- ❖ நெகிழ்வுத் தன்மையுடையது.

**வளரறி மதிப்பீடு** என்பது இருகூறுகளை உள்ளடக்கியது.

- ❖ வளரறி மதிப்பீடு (அ) – செயல்பாடுகளின் வாயிலாக
- ❖ வளரறி மதிப்பீடு (ஆ)– சிறு தேர்வு வாயிலாக


www.TeacherTN.com

## மொழிப்பாடத்திறன்களை வளர்ப்பதற்கான வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

| கேட்டல் செயல்பாடுகள் | பேசுதல் செயல்பாடுகள் | படித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| பிறர் சொல்லக் கேட்டல்/ வானொலி நிகழ்வுகளைக் கேட்டல் | படம் பார்த்துக் கதை சொல்லுதல்/ கருத்துக் கூறுதல் | எழுத்துகளைப் படித்தல் |
| தொலைக்காட்சி நிகழ்வுகளைக் கேட்டல் | குறிப்புகளைக்கொண்டு பேசுதல் | சொற்களைப் படித்தல் |
| உரையாடல்களைக் கேட்டல் | கதை சொல்லுதல் | சொற்றொடர்களைப் படித்தல் |
| பொது இடங்களில் நிகழும் உரையாடல்களைக் கேட்டல் | சிக்கலுக்குத் தீர்வு கூறுதல் | பெயர்ப்பலகைகள் விளம்பரங்களைப் படித்தல் |
| விழாக்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் | தலைப்புச் செய்தி/தலையங்கம் குறித்துப் பேசுதல் | பொருள்புரிந்து படித்தல் |
| குழுக் கலந்துரையாடல்களைக் கேட்டல் | தொலைக்காட்சி நாடகம்/திரைப்படம் குறித்துக் கருத்துக் கூறுதல் | நிறுத்தக் குறிகளுக்கேற்பப் படித்தல் |
| கதை கூறுவதனைக் கேட்டல் | இருவர் உரையாடல் | உரிய ஒலிப்புடன் படித்தல் |
| பாடல்களைக் கேட்டல் | குழுக் கலந்துரையாடல் | குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்தல் |
| கட்டளைகளைக் கேட்டு பின்பற்றல் | படங்களைப் பார்த்துப் பெயர்கள்/நிகழ்வுகளைக் கூறுதல் | மேலோட்டமாகப் படித்தல் |
| | | ஆழ்ந்து படித்தல் |
| | | பொருளுணர்ச்சிக்கேற்பப் படித்தல் |

| எழுதுதல் செயல்பாடுகள் | | படைப்பாற்றல் செயல்பாடுகள் |
|---|---|---|
| வரியொற்றி எழுதுதல் | பொருத்தமான இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுதல் | ஓவியம் வரைதல் |
| எழுத்துகளை உரிய வரிவடிவத்துடன் தெளிவாக/ அழகாக எழுதுதல் | ஒற்றுப்பிழையின்றி எழுதுதல் | படம் பார்த்துக் கருத்து/கதை கூறுதல் |
| உரிய எழுத்து இடைவெளி/சொல் இடைவெளி/ வரி இடைவெளி/ பத்தி இடைவெளிவிட்டு எழுதுதல் | கட்டுரை /கடிதம் எழுதுதல் | படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல் |
| அடித்தல் திருத்தல் இன்றி எழுதுதல் | பாடல்கள் எழுதுதல் | படம் பார்த்துக் கவிதை எழுதுதல் |
| நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல் | விளம்பரங்கள்/முழக்கச் சொற்கள்/சொற்றொடர்கள் எழுதுதல் | கதையின் நிகழ்வைத் தொடங்குதல் |
| மேற்கோள்காட்டி எழுதுதல் | தேவைகளைப் பெற எழுதுதல் | கதை நிகழ்வை முடித்தல் |
| கருத்துகளைக் கோவையாக எழுதுதல் | வீட்டுக்கணக்கு எழுதுதல் | பாடல் /கட்டுரை/ விளம்பரம் எழுதுதல் |
| | நாட்குறிப்பு எழுதுதல் | நாடகம் நடித்தல் |
| | | பாத்திரமாக நினைத்துப் பேசுதல்/நடித்தல் |
| | | பங்கேற்று நடித்தல் |
| | | போலச் செய்தல் |



www.TeacherTN.com

**வளரறி மதிப்பீடு (அ) – Formative Assessment - FA(a)**

வளரறி மதிப்பீடு (அ) என்பது, கற்போர் பல்வேறு வகையான கற்றல் செயல்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்பதனை மதிப்பிடுதலாகும். பாடப்பொருளைக் கற்கும்பொழுதே கற்போரை மதிப்பிடும் முறையாகும். பொருத்தமான இடங்களில் குழுக்களையும் மதிப்பிட இடமளிக்கிறது. இந்த மதிப்பீடானது ஆசிரியருடைய உற்றுநோக்கல்/கற்போரின் பங்கேற்பு/ வெளிப்பாடு/ படைப்புத்திறன் வெளிப்பாடு முதலிய உத்திமுறைகளைப் பயன்படுத்தி மதிப்பிடுதலாகும்.

**சிறப்புகள்**

* கற்றல்–கற்பித்தல் நடைபெறும்பொழுதே செய்யப்படும் மதிப்பீடு.
* கற்றல் – கற்பித்தல் பற்றித் தொடர்ச்சியான மீளாய்வை ஆசிரியருக்கும் மாணவருக்கும் வழங்குகிறது.
* கற்றல் – கற்பித்தலில் ஏற்படும் இடைவெளிகளைக் களைய ஒரு வாய்ப்பாக இஃது அமைந்துள்ளது.
* மாணவர்கள் கற்கும் முறையறிந்து அவர்களுக்கு வழிகாட்ட உதவுகிறது.
* மாணவர்கள் தம்மைத்தாமே மதிப்பிடவும் கற்றலை மேம்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.
* உடன்பயிலும் மாணவர் கற்றலுக்கு வழிவகுக்கிறது.
* குறையறி சோதனைக்கும் குறைதீர் கற்பித்தலுக்கும் உதவுகிறது.
* காலஅளவில் நெகிழ்ச்சித்தன்மையுடையது.

## வளரறி மதிப்பீடு (அ) செயல்பாடுகள்

- ❖ பாடுதல்
- ❖ திரும்பக் கூறுதல்
- ❖ பங்கேற்று நடித்தல்
- ❖ கதை கேட்டல்
- ❖ கதை உருவாக்குதல்
- ❖ விவரித்தல், வருணித்தல்
- ❖ விவாதம்
- ❖ நிகழ்வுகளைப் பதிவு செய்தல்
- ❖ ஒப்புவித்தல்
- ❖ பொம்மலாட்டம்
- ❖ குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல்
- ❖ கதை கூறுதல்
- ❖ வரைதல்
- ❖ திறந்தநிலை வினாக்களுக்கு விடையளித்தல்
- ❖ கலந்துரையாடல்
- ❖ செயல்திட்டம்

**செயல்திட்டம் கீழ்க்காணும் வகைகளில் அமையும்**

| | |
|---|---|
| ✓ மாதிரிகள் உருவாக்குதல்<br>✓ கைவினைப் பொருள்கள் செய்தல்<br>✓ செய்திகள் திரட்டுதல்<br>✓ படத்தொகுப்பு உருவாக்குதல்<br>✓ நேர்காணல் | ✓ மேற்கோள்கள் திரட்டுதல்<br>✓ அகரமுதலியைப் பயன்படுத்தித் தகவல் சேகரித்தல்<br>✓ துணுக்குப் புத்தகம் உருவாக்குதல் கண்காட்சி/பொருட்காட்சி நடத்துதல்<br>✓ ஆய்வுகள் நடத்துதல் |

மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் மட்டுமன்றிப் பாடப்பகுதிக்கும் திறனுக்கும் ஏற்ற பல்வேறு வகையான செயல்பாடுகளைத் தேவைக்கேற்ப ஆசிரியர் வடிவமைத்துக்கொள்ளலாம்.



www.TeacherTN.com

## வளரறி (அ) செயல்பாடுகள்– மதிப்பீட்டு முறைகள்

### 1. பாடல் பாடுதல் (தனியாள் செயல்)

பாடப்பகுதியில் கற்றறிந்த பாடல்களையோ மாணவர்கள் அறிந்த பாடல்களையோ பாடச் செய்து மதிப்பீடு செய்க.

### நோக்கம்

உரிய ஒலிப்புடன் தங்குதடையின்றி ஓசை நயத்துடன் பாடும் திறனைச் சோதித்தறிதல்

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. உரிய ஒலிப்புடன் பாடுதல் |
| 2. தெளிவு |
| 3. ஓசைநயம் |
| 4. தங்குதடையின்றி, தொடர்ந்து பாடுதல் |
| 5. அச்சம், கூச்சமின்றிப் பாடுதல் |

### 2. மனப்பாடமாக ஒப்புவித்தல் (தனியாள் செயல்)

செய்யுள் பகுதிகளை மனப்பாடமாக ஒப்புவிக்கச் செய்தல்

### நோக்கம்

செய்யுளை மனப்பாடமாக உரிய ஒலிப்புடன் ஒப்புவிப்பதை மதிப்பிடுதல்

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. மனப்பாடமாக ஒப்புவித்தல் |
| 2. உரிய ஒலிப்புடன் ஒப்புவித்தல் |
| 3. அடிபிறழாமல் ஒப்புவித்தல் |

### 3. பொம்மலாட்டம் (குழுச் செயல்பாடு)

மாணவர்கள் பாடப்பகுதியில் உள்ள கதையையோ தாங்கள் அறிந்த வேறு கதையையோ பொம்மலாட்டமாக நிகழ்த்திக் காட்டச் செய்தல்.

### நோக்கம்

மாணவர்கள் கதைப்பகுதியைக் கதைத்தொடர்பு மாறாமல், கதைப்பாத்திரத்திற்கு ஏற்ற குரல் ஏற்றஇறக்கத்துடன், உரிய உணர்ச்சியுடன் பொம்மலாட்டமாக வழங்குதலை மதிப்பிடுதல்.


www.TeacherTN.com

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. கதைத்தொடர்பு மாறாமல் வழங்குதல் |
| 2. குரல் ஏற்ற இறக்கம், உணர்ச்சி |
| 3. பொம்மைகளைப் பொருத்தமாக இயக்குதல் |
| 4. குழு மனப்பான்மை |
| 5. பாடல், நகைச்சுவை, கற்பனை |

## 4. பங்கேற்று நடித்தல் (தனியாள் செயல் மற்றும் குழுச் செயல்பாடு)

பாடப்பகுதியில் உள்ள கதைகள், நாடகங்கள், ஆசிரியரால் வழங்கப்படும் சூழல் இவற்றைக் குழுவாகவோ தனியாகவோ பாத்திரமேற்று நடித்தல்.

## நோக்கம்

கொடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்பப் பாத்திரமேற்றுப் பேசியோ உடல் அசைவுகள் மூலமோ நடிக்கும் திறனை மதிப்பிடுதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. முகக்குறிப்பு, உடலசைவு |
| 2. குரல் ஏற்ற இறக்கம் , உணர்ச்சி வெளிப்பாடு |
| 3. பாத்திரமாகவே மாறி நடித்தல் |
| 4. ஈடுபாடு |

## 5. படத்தொகுப்பு (தனியாள் செயல்)

கொடுக்கப்பட்ட தலைப்புக்கு ஏற்ற படங்களைத் திரட்டி, ஒட்டிப் படத்தொகுப்பு உருவாக்குதல்.

## நோக்கம்

பொருத்தமான தலைப்புக்கு ஏற்ற படங்களைத் திரட்டித் தொகுத்து, வரிசைப்படுத்தி, அழகாக ஒட்டிப் படத்தொகுப்பு உருவாக்கியுள்ளனரா என மதிப்பிடுதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. தலைப்புக்கு ஏற்ற படங்கள் |
| 2. வரிசைப்படுத்துதல் |
| 3. உருவாக்குதலில் அழகு |
| 4. தலைப்பிடல் |



www.TeacherTN.com

## 6. மொழி விளையாட்டுகள் (தனியாள் செயல் – சிறு குழுச்செயல்)

மாணவர்கள் மொழி விளையாட்டுகளில் ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் பங்கேற்று மொழித்திறன்களை வெளிப்படுத்துதல்.

### நோக்கம்

மொழிசார்ந்த விளையாட்டுகளில் மாணவர்களை ஆர்வமுடன் ஈடுபடச்செய்து அவ்விளையாட்டின் மூலம் வெளிப்படும் மொழித்திறன்களை மதிப்பிடுதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. பங்கேற்றலில் ஆர்வம் |
| 2. முழுமையாக ஈடுபடுதல் |
| 3. விளையாட்டின்வழி வெளிப்படுத்திய திறன் |
| 4. விதிகளைப் பின்பற்றுவதில் நேர்மை |

## 7. கதை கூறுதல் (தனியாள் செயல்)

மாணவர்கள் பாடப்பகுதியில் உள்ள கதையினையோ தனக்குத் தெரிந்த கதையினையோ வகுப்பறையில் கூறுதல்.

### நோக்கம்

கதைத் தொடர்பு மாறாமல் உரிய ஏற்றஇறக்கத்துடன் உணர்ச்சி வெளிப்படும் வகையில் கதை கூறுதலை மதிப்பிடுதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. கதை நிகழ்வைத் தொடர்ச்சியாகக் கூறுதல் |
| 2. குரல் ஏற்ற இறக்கம், உணர்ச்சியுடன் கூறுதல் |
| 3. கதைக்கருத்தை வெளிப்படுத்திய முறை |
| 4. ஈடுபாடு |
| 5. அச்சம், கூச்சமின்மை |

## 8. கதை உருவாக்குதல் (தனியாள் செயல் மற்றும் குழுச் செயல்)

ஆசிரியரால் அளிக்கப்பட்ட தலைப்புக்கு ஏற்பவோ, குறிப்புகளைக் கொண்டோ, பாதிக்கதை கூறி மீதிக்கதையினை முடிக்கவோ, கதையின் முடிவினை மாற்றிக் கூறவோ, முடிவு கூறிய நிலையில் முன் நிகழ்வு என்ன என்பதனைக் கூறவோ, ஆளுக்கு ஒரு தொடர் கூறிக் கதையை உருவாக்கச் செய்தல்.

### நோக்கம்

படைப்பாற்றல், கற்பனை ஆற்றல், சூழலறிவு, கூர்சிந்தனை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கதையை உருவாக்கும் திறனை மதிப்பிடுதல்.


www.TeacherTN.com

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. கதையை உருவாக்கும் முயற்சி |
| 2. படைப்பாற்றல் மற்றும் கற்பனை |
| 3. வெளிப்படுத்திய முறை |
| 4. பாத்திரப்படைப்பு |
| 5. கதைக்கோவை |

## 9. திறந்தநிலை வினாக்களுக்கு விடை கூறுதல் (தனியாள் செயல்)

கேட்கப்படும் திறந்தநிலை வினாக்களுக்குப் பொருத்தமாகவும் கோவையாகவும், ஆழமாகவும் உண்மைத்தன்மையுடனும் தற்சிந்தனையுடனும் பல்நோக்குச் சிந்தனையுடனும் அறிவார்ந்த விடையை அளித்தல். வினாக்கள் ஆர்வத்தைத் தூண்டுவனவாக அமைதல் வேண்டும். மாணவர்கள் அளிக்கும் விடையைச் சரி, தவறு என ஆசிரியர் கூறுதல் கூடாது.

### நோக்கம்

கேட்கப்படும் வினாக்களுக்கு மாணவர்கள் தாமாகவே அறிவு வளர்ந்த நிலையில் ஆர்வத்துடன் விடை அளிக்கும் திறனை மதிப்பீடு செய்தல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. வினாவிற்குப் பொருத்தமான விடை |
| 2. கோவையாக, தெளிவாக விடையளித்தல் |
| 3. வினாவிற்கு ஆழமாகவும் / உண்மைத்தன்மையுடனும் விடை அளித்தல் |
| 4. பல்நோக்குச் சிந்தனையுடனும், தாமாகவும் விடை அளித்தல் |
| 5. ஈடுபாடு |

## 10. குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல் (தனியாள் செயல்)

குறிப்பிட்ட தலைப்பில் பேசச் செய்து மதிப்பீடு செய்க.

### நோக்கம்

உரிய ஒலிப்புடன், தங்குதடையின்றி, குரல் ஏற்றஇறக்கத்துடன், உணர்ச்சியுடன் பேசும் திறனை மதிப்பிடுதல்.



www.TeacherTN.com

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. உரிய ஒலிப்புடன் பேசுதல் |
| 2. தலைப்புக்கு ஏற்பப் பேசுதல் |
| 3. தெளிவாகப் பேசுதல் |
| 4. தங்குதடையின்றி, தொடர்ந்து பேசுதல் |
| 5. அச்சம், கூச்சமின்றிப் பேசுதல் |

## 11. விவாதம் (சிறு குழு மற்றும் முழுவகுப்புச் செயல்பாடு )

கொடுக்கப்பட்ட தலைப்பினை ஒட்டியும் வெட்டியும் தன் கருத்தினைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் உறுதியாகவும் உரிய சான்று காட்டியும் வெளிப்படுத்துதல்.

## நோக்கம்

ஆசிரியர், மாணவரின் பங்கேற்பு, சகிப்புத்தன்மை, பொறுமை, கருத்துக்கோவை, சொல்லாட்சித்திறன் முதலியவற்றை மதிப்பிடுதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. ஆர்வத்துடன் பங்கேற்றல் |
| 2. மாற்றுக் கருத்துகளைப் பொறுமையுடன் கேட்டல் |
| 3. கோவையாகப் பேசுதல் |
| 4. சொற்களைத் திறம்படக் கையாளுதல் |
| 5. உரிய சான்றுகளுடன் உறுதியாகப் பேசுதல் |

## 12. கலந்துரையாடல் (சிறு குழு மற்றும் முழு வகுப்புச்செயல்பாடு)

மாணவர்கள் குறிப்பிட்ட தலைப்பில் தத்தம் கருத்துகளை எடுத்துரைத்தல், பிறர் கூறும்போது குறுக்கிடாமல் பொறுமையாகக் கேட்டல், கருத்துகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தல், உண்மைச் செய்திகளை மனமுவந்து ஏற்றல்.

## நோக்கம்

குறிப்பிட்ட தலைப்பிற்கு உரிய கருத்துகளைக் குழுவில் வழங்கவும், பிறர் கருத்தை மதிக்கவும், தன்முறை வரும்வரை காத்திருந்து தனது கருத்தை வலியுறுத்தவும், மாற்றுக் கருத்துகளைப் பிறர் ஏற்குமாறு முன்வைக்கும் திறனும், தவறான கருத்துகளைத் துணிந்து



www.TeacherTN.com

மறுக்கவும், உரிய கருத்துகளை ஏற்கும் மனப்பான்மையும் பெற்றுள்ளனரா என்பதனை மதிப்பிடுதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. தலைப்புக்கு ஏற்ற கருத்தைக் குழுவில் வழங்குதல் |
| 2. பிறர் கூறும் கருத்தைப் பொறுமையுடன் கேட்டல் |
| 3. தவறான கருத்தை மாற்றிக் கொண்டு உரிய கருத்தை ஏற்கும் மனப்பான்மை |
| 4. ஈடுபாடு மற்றும் பங்கேற்பு |

## 13. கருத்து வரைபடம் (தனியாள் செயல்)

மாணவர்கள் கொடுக்கப்பட்ட பகுதியைப் படித்துக் கருத்தை உள்வாங்கிக் கொண்டு, விடுபட்ட இடத்தை நிரப்பிக் கருத்து வரைபடத்தை நிறைவு செய்தல்.

## நோக்கம்

கொடுக்கப்பட்ட பகுதியைப் படித்தறிதல், கருத்துகளைப் புரிந்து கொள்ளுதல், புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துதல் முதலிய திறன்களை மதிப்பிடுதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. பொருத்தமான இடத்தில் பொருத்தமான கருத்தை வெளிப்படுத்துதல் |
| 2. தெளிவாக வெளிப்படுத்தும் பாங்கு |
| 3. தற்சிந்தனை வெளிப்பாடு |

## 14. செயல்திட்டம் (தனியாள் செயல் மற்றும் சிறு குழுச் செயல்பாடு )

கொடுக்கப்பட்ட செயலைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி முடித்தல்.

## நோக்கம்

கொடுக்கப்பட்ட செயல்திட்டத்தை மாணவர்களே திட்டமிட்டுச் செயல்படுத்திக் குறித்த காலத்தில் முடிக்கும் திறனை மதிப்பிடுதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் |
|---|
| 1. முறையான திட்டமிடல் |
| 2. பொருத்தமுடைமை |
| 3. வெளிப்படுத்தும் முறை |
| 4. குறித்த காலத்தில் முடித்தல் |



www.TeacherTN.com

மேற்காணும் மதிப்பீட்டு முறைகள் மாதிரியாக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டுக் கூறுகளும் மதிப்பெண்களும் பாடப்பொருளுக்கு ஏற்பவும் வகுப்புநிலைக்கு ஏற்பவும் செயல்பாட்டின் தன்மைக்கு ஏற்பவும் மாறுபடலாம்.

**வளரறி (அ) மதிப்பீட்டுச் செயல்பாடுகள் கீழுள்ளவாறும் அமையலாம்.**

1. தனியாள் செயல்பாடு
2. சிறு குழுச் செயல்பாடு
3. முழு வகுப்புச்செயல்பாடு

வளரறி (அ) மதிப்பீட்டுச் செயல்பாடுகளைக் கற்பிக்கும் பாடப்பொருளுக்கு ஏற்பவும் வகுப்புநிலைக்கு ஏற்பவும் செயல்பாட்டின் தன்மைக்கு ஏற்பவும், தனியாள் செயலாகவோ, சிறுகுழுச் செயலாகவோ, முழுவகுப்புச் செயலாகவோ ஆசிரியர் வடிவமைத்துக்கொள்ளலாம்.

**வளரறி (அ) செயல்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்றாலேயேஅவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் விதமாக குறைந்த அளவு மதிப்பெண்ணாக ஐந்து மதிப்பெண் வழங்கலாம்.**

## வளரறி மதிப்பீடு (அ) – மதிப்பீடு செய்யும் முறை

| வ.எண் | மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண் | தரம் | குறியீடு |
|---|---|---|---|---|
| 1 | செயலை முறையாக ஒழுங்காக தெளிவாகச் செம்மையாக முழுமையாக முடித்தல் | 10 | நனி நன்று | ☆ ☆ ☆ |
| 2 | செயலை முறையாக ஒழுங்காக தெளிவாகச் செம்மையாக முழுமையாக முடித்தல். (ஓரிரு குறைபாடுகள் இருக்கலாம்) | 8,9 | நன்று | ☆ ☆ |
| 3 | முழுமையாக முடிக்க இயலாத நிலை (4 (அ) 5 குறைபாடுகள் இருக்கலாம்) | 6,7 | நிறைவு | ☆ |
| 4 | புரிந்துகொள்ளும் திறன் இல்லாததனால் முழுமையாக முடிக்க இயலாத நிலை (5க்கும் மேற்பட்ட குறைபாடுகள்) குறைதீர் கற்பித்தல் தேவை | 5 | முடிக்க முயற்சி வேண்டும். | ✓ |

## வளரறி மதிப்பீடு (ஆ) Formative Assessment - FA (b)

- ❖ கற்பிக்கும்பொழுதே ஆசிரியரால் நடத்தப்பெறும் சிறு எழுத்துத் தேர்வாகும்.
- ❖ பல்வகைப்பட்ட வினாக்களை உள்ளடக்கியது. (எ.கா. புதிர்கள், விடுகதைகள் முதலியன.)

## வளரறி மதிப்பீடு (ஆ) FA (b)

- ❖ சரியா? தவறா? ஆம் – இல்லை
- ❖ பலவுள் தெரிவு
- ❖ பொருத்துக.
- ❖ கோடிட்ட இடத்தை நிரப்புக



www.TeacherTN.com

- ❖ வரிசைப்படுத்துக
- ❖ வகைப்படுத்துக
- ❖ சொல்லக்கேட்டு எழுதுக.
- ❖ சிறுவினா
- ❖ குறுவினா
- ❖ பத்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக
- ❖ விடுகதைகள், புதிர்கள்
- ❖ சிக்கல் தீர்க்கும் செயல்பாடுகள்
- ❖ திறன் சார்ந்து வரைதல்
- ❖ மாணவர்களே உருவாக்கும் வினாக்கள்
- ❖ மொழி விளையாட்டு

முதலியவற்றை உள்ளடக்கிய சிறுதேர்வாக (Slip test) அமையும். ஒவ்வொரு வளரறி மதிப்பீடு (ஆ) செயல்பாடும் 10 மதிப்பெண்களுக்கு உரியதாக அமைத்தல் வேண்டும்.

**மேற்குறித்த செயல்பாடுகள் மட்டுமன்றிப் பாடப்பகுதிக்கும் திறனுக்கும் ஏற்ற பல்வேறு வகையான செயல்பாடுகளைத் தேவைக்கேற்ப ஆசிரியர் வடிவமைத்துக் கொள்க.**

## வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b) மதிப்பீட்டு முறை

ஒவ்வொரு வளரறி மதிப்பீடு (ஆ) செயல்பாடும் 10 மதிப்பெண்களைக் கொண்டது. மாணவர்கள் அளிக்கும் விடைகளுக்கேற்ப மதிப்பெண் வழங்குதல் வேண்டும். திறனடைவு பெறாத மாணவர்களுக்குக் குறைதீர் கற்பித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## குறைதீர் கற்பித்தல்

ஒவ்வொரு வளரறி மதிப்பீட்டின் முடிவிலும் குறையறி சோதனை நடத்தித் தேவைப்படும் மாணவர்களுக்குக் கற்றலடைவு பெறும்வரை பல்வேறு குறைதீர் கற்பித்தல் செயல்பாடுகளை வடிவமைத்துக் கற்பித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## தொகுத்தறி மதிப்பீடு – Summative Assessment (SA)

தொகுத்தறி மதிப்பீடு என்பது, மாணவரின் கல்விசார் கற்றலடைவை **எழுத்துத் தேர்வு** வாயிலாகப் பருவ இறுதியில் மதிப்பீடு செய்வதாகும். இம்மதிப்பீடு, **வினாத்தாள் திட்டவரைவின்படி** கற்றல் நோக்கங்களை வெளிக்கொணருமாறு **அறிதல், புரிதல், பொருளறிதல், பயன்படுத்தல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல்** ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.



www.TeacherTN.com

தொகுத்தறி மதிப்பீடானது,

- ❖ வினாத்தாள் திட்ட வடிவமைப்பின்படி பருவ இறுதியில் நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வாகும்.
- ❖ அறிதல், புரிதல், பயன்படுத்தல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் அடிப்படையில் அமையும்.
- ❖ மாணவரின் கற்றல் அடைவுக்குச் சான்றளிக்கும் வகையில் அமையும்.
- ❖ காலவரையறைக்கு உட்பட்டதாகும்.

| வளரறி மதிப்பீடு | தொகுத்தறி மதிப்பீடு |
|---|---|
| ➢ கற்பதற்காக மதிப்பிடுதல். | ➢ கற்றதனை மதிப்பிடுதல். |
| ➢ திட்டமிட்டும் அல்லது தேவைக்கு ஏற்பவும் நடத்தப்படுவது. | ➢ திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுவது. |
| ➢ பருவம் முழுமையும் நடைபெறக் கூடியது. | ➢ பருவ இறுதியில் நடைபெறுவது. |
| ➢ குறையறியவும், குறைதீர் கற்பித்தலுக்கும் வாய்ப்புள்ளது. | ➢ கற்றல்அடைவை அறிந்துகொள்ள வாய்ப்புள்ளது. |
| ➢ காலஅளவில் நெகிழ்ச்சித்தன்மையுடைது. | ➢ காலவரையறைக்குட்பட்டது. |

## மதிப்பெண் மற்றும் தரநிலை – பதிவேடுகளில் பதிவு செய்தல்

- ❖ ஒவ்வொரு பருவத்திலும் நடத்தப்பெறும் பல்வேறு வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகளிலிருந்து குறைந்தது நான்கு வளரறி (அ) மதிப்பீடுகளும் நான்கு வளரறி (ஆ) மதிப்பீடுகளும் பதிவேடுகளில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

- ❖ வளரறி மதிப்பீடு ஒவ்வொன்றும் 10 மதிப்பெண்களுக்கு உரியது.

- ❖ அவற்றுள் மாணவர்கள் சிறப்பாகச் செயல்பட்ட இரண்டு வளரறி (அ) மதிப்பீட்டு மதிப்பெண்களும் இரண்டு வளரறி (ஆ) மதிப்பீட்டு மதிப்பெண்களும் மதிப்பெண் மற்றும் தரநிலைப் பதிவேடுகளில் (**Mark and Grade Register**) பதிவு செய்தல் வேண்டும்.

- ❖ ஒவ்வொரு பருவ இறுதியிலும் 60 மதிப்பெண்களுக்குத் தொகுத்தறி மதிப்பீடு **(SA)** நடத்தப்பெறும். தொகுத்தறி மதிப்பீட்டில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள், மதிப்பெண் மற்றும் தரநிலைப் பதிவேடுகளில் **(Mark and Grade Register)** பதிவு செய்தல் வேண்டும்.

- ❖ ஒவ்வொரு பருவத்திற்கும் வளரறி மதிப்பீட்டில் **(FA)** 40 மதிப்பெண்களும் தொகுத்தறி மதிப்பீட்டில் **(SA)** 60 மதிப்பெண்களும் என மொத்தம் 100 மதிப்பெண்களுக்கு உரிய தரநிலை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும்.



www.TeacherTN.com

## மாற்றுத்திறனாளருக்கான மதிப்பீட்டு நெறிமுறைகள்

- கற்றல் செயல்பாடுகளில் மாற்றுத்திறனாளர்கள் தம்மால் இயன்ற அளவிற்குக் கற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல் வேண்டும்.
- கற்றல் அடைவு பெறுவதற்குப் பல்வேறு விதமான வாய்ப்புகளை வரையறையின்றி வழங்குதல் வேண்டும்.
- இயலாமையைக் காரணம் காட்டி மாணவனது கற்றலை ஓர் எல்லைக்குள் நிறுத்திவிடுதல் கூடாது.
- அனைத்து மாற்றுத்திறனாளருக்கும் அவரவர் கற்றல் விரைவுக்கு ஏற்பக் கற்பதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.
- மாணவர் ஒருவருக்கு ஏற்ற கற்றல் திட்டம் (**IEP**-**I**ndividualized **E**ducational **P**rogramme) பொருத்தமானவர்களால் வடிவமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.
- மாணவர் ஒருவருக்கான கற்றல் திட்டம் **(IEP)** மாணவரின் தேவைக்கு ஏற்ப, எவற்றைக் கற்பித்தல் வேண்டும்? எப்படிக் கற்பித்தல் வேண்டும்? எப்படி மதிப்பீடு செய்தல் வேண்டும்? என்பதனை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.



www.TeacherTN.com

# முதல் பருவம்
## குறைந்த பட்ச கற்றல் இலக்குகள்– வகுப்பு வாரியான பட்டியல்

| திறன் பகுதி | I | II | III | IV | V |
|---|---|---|---|---|---|
| கேட்டல் | எளிய ஓசைநயம் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும் | இயற்கை சார்ந்த பாடல்களையும், சிந்தனையைத் தூண்டும் கதை, குழு அறிமுக உரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும் | வருணனை, விடுகதை பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். | ஓசைநயம் மிக்க கருத்துப்பாடல், நாட்டுப்புறக் கதைகள், சூழ்நிலைகளில் உற்றுக்கேட்கும் விவரங்கள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். | விழிப்புணர்வு கதைகள், கலந்துரையாடல் போன்றவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். |
| பேசுதல் | தன் பெயர், தன் குடும்ப உறுப்பினர்கள் பெயர், ஊர்ப்பெயரைக் கூற அறிந்திருக்க வேண்டும். | உரிய ஒலிப்புடன் பாடவும், படக்கதைகளைப் பார்த்து நிகழ்வைக் கூறவும், வினாக்கள் கேட்கவும், அறிந்திருக்க வேண்டும். | தங்குதடையின்றிப் பேசும் திறன் பெற்றிருக்க வேண்டும். | தங்குதடையின்றியும் வருணனை கலந்தும் பேச அறிந்திருக்க வேண்டும். | குறிப்பிட்ட தலைப்பில் பேசவும், இயல்பாக உரையாடவும் அறிந்திருக்க வேண்டும். |
| படித்தல் | எழுத்துகளை அடையாளம் காணும் திறனும் மூன்று அசைகளுக்கு உட்பட்ட சொற்களைப் படிக்கும் திறனும் பெற்றிருக்க வேண்டும். | படங்களோடு கூடிய சொற்களையும் எளிய சந்தப் பாடல்களையும் சிறு சிறு தொடர்களையும் சிறுவர் படக்கதைகளையும் உரிய ஒலிப்புடன் உரக்கப் படிக்க அறிந்திருக்க வேண்டும். | அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக்குறியீடுகள், கொடுக்கப்பட்ட தகவல்கள், கதைகள் ஆகியவற்றை உரிய ஒலிப்புடன் படிக்க அறிந்திருத்தல் வேண்டும். | கதைகளை நிறுத்தற்குறிகளுக்கு ஏற்ப படித்தறியும் திறன் பெற்றிருக்க வேண்டும். | அழைப்புகள், நிகழ்ச்சி அறிவிப்புகள், துண்டு வெளியீடுகள் ஆகியவற்றைப் படித்து, புரிந்து கொண்டு அதிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். |
| எழுதுதல் | நேர்கோடு, வளைகோடு, சாய்வுக்கோடுகளை எழுதவும், புள்ளிகளை இணைத்து எழுதவும், சொற்களைப் பார்த்து எழுதவும் திறன் பெற்றிருக்க வேண்டும், | படங்களைப் பார்த்துப் பெயர் எழுதவும், படங்களைப் பார்த்து சிறு தொடர் எழுதவும், சொற்களைப் பிறர் சொல்லக் கேட்டு எழுதவும் அறிந்திருத்தல் வேண்டும். | படத்தைப் பார்த்து, சிறு சிறு தொடர்கள் எழுதவும், இடைவெளி விட்டு எழுதவும் பத்தியைப் படித்து எளிய வினாக்களுக்கு விடை எழுதவும் அறிந்திருக்க வேண்டும். | சொல்வதைக் கேட்டுப் பிழையின்றி எழுதவும், பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதவும், புதிர்களை எழுதவும், விடுப்புக் கடிதம் எழுதவும் அறிந்திருக்க வேண்டும். | பொருளுணர்வுக்கு ஏற்ப இடைவெளி விட்டு எழுதவும் பத்தியைப் படித்து அதிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதவும் உறவுமுறைக் கடிதம் எழுதவும் நாட்குறிப்பு எழுதவும் அறிந்திருக்க வேண்டும். |



www.TeacherTN.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| படைப்பாற்றல் | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டவும், அச்சுப் பதித்து உருவங்கள் செய்யவும் அறிந்திருக்க வேண்டும். | விரும்பிய படம் வரைந்து வண்ணம் தீட்டவும், பெருவிரல் அச்சிலிருந்து உருவங்கள் உருவாக்கவும் கதைகளைக் கூறவும் படத்தொகுப்பு தயாரித்தல் போன்ற செயல்திட்டங்கள் செய்யவும் அறிந்திருக்க வேண்டும். | படத்தை நிறைவு செய்யவும், கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்கவும் அறிந்திருக்க வேண்டும். | படம் பார்த்து வருணித்து எழுதவும் படத்தொகுப்பு உருவாக்கவும், அறிந்திருத்தல் வேண்டும். | பாடல் எழுதவும், அழைப்பிதழ் உருவாக்கவும் அறிந்திருத்தல் வேண்டும். |
| நடைமுறை இலக்கணம் | ஒத்த ஓசையுடைய சொற்களை இனம் காணும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். | ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்கும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். | பெயருக்கு ஏற்ற வினைமுடிவை அறிந்து எழுதும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். | திணை வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்தும் திறனும், காலங்களை அறிந்துகொள்ளும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். | இணைப்புச்சொற்களை அறிந்து பயன்படுத்தவும் மரபுத் தொடர்களை அறிந்து பயன்படுத்தவும் இணைச்சொற்களை அறிந்து பயன்படுத்தவும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். |
| தானே கற்றல் | – | சொற்களை அகர வரிசைப்படுத்த அறிந்திருத்தல் வேண்டும். | அகரமுதலியைப் பயன்படுத்தவும் சொற்களை அதன் முதல் இரண்டு எழுத்துகளின் அடிப்படையில் அகரவரிசைப் படுத்தவும் அறிந்திருத்தல் வேண்டும். | சிறு சிறு கதைகளைப் படிக்கவும், அகர முதலியைப் பயன்படுத்திப் பொருளறியவும் திறன் பெற்றிருக்க வேண்டும். | சிறு சிறு கதைகளைப் படிக்கவும் அகரமுதலியைப் பயன்படுத்தவும் அறிந்திருத்தல் வேண்டும். |
| சொற்களஞ்சியம் பெருக்கம் | – | சொல் விளையாட்டுகளைப் புரிந்து கொண்டு விளையாடவும் எதிர்ச்சொற்களை அறிந்து கொண்டு பயன்படுத்தவும் அறிந்திருக்க வேண்டும். | பாடம் மற்றும் செய்யுள் பகுதியில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருளறிந்து கொள்ளுதல், சில எழுத்துகளைக் கொண்டு, பல சொற்களை உருவாக்குதல், ஒரு சொல்லில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி, பல சொற்களை உருவாக்குதல் போன்ற திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். | உரைநடை மற்றும் செய்யுள் பகுதியிலுள்ள புதிய சொற்கள், அருஞ்சொற்களுக்குப் பொருள் அறிதல், எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், இணைச் சொற்கள் அமைத்தல் போன்ற திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். | பொருளறிதல், எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், சொற்றொடர் அமைத்தல் மற்றும் மொழி விளையாட்டு, புதிர் விளையாட்டு போன்றவற்றைப் புரிந்து விளையாடவும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். |



www.TeacherTN.com

# வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## [ வளரறி மதிப்பீடு (அ) மற்றும் வளரறி மதிப்பீடு (ஆ) ]

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | **1** |
| **பாட எண்** | – | **1** |
| **பாடத் தலைப்பு** | – | டம் டம் . . . . டும் டும் . . . கச்சேரி |
| **இலக்கு / திறன்** | – | கேட்டல் |
| **நோக்கம்** | – | சொல்வதனைக் கேட்டுத் திரும்பக் கூறுகிறார்களா என மதிப்பிடுதல். |
| **கால அளவு** | – | **10** நிமிடங்கள் |
| **செயல்பாடு** | – | குழுச் செயல்பாடு – வளரறி மதிப்பீடு (அ) |

**வகுப்பறையில் செயல்படுத்தும் முறை**

குழந்தைகளை வட்டமாக நிற்கச் செய்க. வட்டத்தினுள் ஆசிரியர் நிற்க. ஆசிரியர், விலங்கின் பெயரையோ, பறவையின் பெயரையோ கூறி ஒரு குழந்தைக்குப் பந்தை எறிந்து ஆசிரியர் கூறிய பெயரை அக்குழந்தையைக் கூறச் செய்க. இவ்வாறு தொடர்ந்து விளையாடுக.

(எ.கா) ஆசிரியர் : சிங்கம் குழந்தை :சிங்கம்

( காக்கா, கிளி, குயில், கோழி, பசு, பூனை, ஆடு, நாய், சிங்கம், புலி)

**மதிப்பீடு**

குழந்தைகள், ஆசிரியர் சொல்வதனைக் கேட்டு அப்படியே சொல்கிறார்களா ? என்பதனைக் கருத்தில் கொண்டு மதிப்பெண்கள் வழங்குக.

**குறைதீர் கற்பித்தல்**

ஆசிரியர் சொல்வதனைக் கேட்டு அப்படியே சொல்லாத குழந்தைகளை அழைத்துச் சிறு குழுவாக மாற்றி விளையாட்டைத் தொடர்க.

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | **1** |
| **பாட எண்** | – | **2** |
| **பாடத் தலைப்பு** | – | (என் குடும்பம்) என் பந்து |
| **இலக்கு / திறன்** | – | பேசுதல் |
| **நோக்கம்** | – | குடும்ப உறுப்பினர்களைப் பற்றிப் பேசுகிறார்களா என மதிப்பிடுதல் |
| **கால அளவு** | – | **20** நிமிடங்கள் |
| **செயல்பாடு** | – | தனியாள் செயல் – வளரறி மதிப்பீடு (அ) |

**வகுப்பறையில் செயல்படுத்தும் முறை**

குடும்ப உறுப்பினர்களின் புகைப்படங்களைக்கொண்டு வரச் சொல்லி அவர்களைப் பற்றிப் பேசச்செய்க. புகைப்படங்கள் இல்லாதபொழுது குடும்ப உறுப்பினர்களைப் பற்றி இயல்பாகவே பேசச் செய்க.

**மதிப்பீடு**

குடும்ப உறுப்பினர்களைப் பற்றி ஈடுபாட்டுடன் பேசிய மாணவர்களுக்கு உரிய மதிப்பெண்கள் வழங்குக.

**குறைதீர் கற்பித்தல்**

ஆசிரியர், கிளர் வினாக்களின் மூலம் பேசாத குழந்தைகளையும் பேசச் செய்க.



www.TeacherTN.com

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | 2 |
| **பாட எண்** | – | 5 |
| **பாடத்தலைப்பு** | – | பார்ப்போம்! படிப்போம்! |
| **இலக்கு / திறன்** | – | படங்களோடு கூடிய சொற்களைப் படித்தல் |
| **நோக்கம்** | – | சொற்களைப் படித்தல் |
| **கால அளவு** | – | 20 நிமிடங்கள் |
| **செயல்பாடு** | – | உரிய சொல்லை வட்டமிடுக.<br>தனியாள் செயல்பாடு – வளரறி மதிப்பீடு (ஆ) |
| **செயல்படுத்தும் முறை** | – | கீழ்க்காணும் படத்தாளை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குக. படத்தையும் சொல்லையும் உற்றுநோக்கிப் படத்திற்கேற்ற சொல்லை அடிக்கோடிடச் செய்க. |

| | | |
|---|---|---|
|  தென்னை மரம் / வேப்பமரம் |  செம்பருத்தி/ செங்காந்தள் |  வெண்டைக்காய்/ கத்தரிக்காய் |
|  விழி / வில் |  கொக்கு /வாத்து |  தொட்டில் / ஊஞ்சல் |
|  பௌவம் / வானவில் |  பூங்கா / கடற்கரை |  ஒட்டகச்சிவிங்கி/ வரிக்குதிரை |
|  கணினி / தொலைக்காட்சி |  முந்திரி / பேரீச்சை |  குத்துவிளக்கு / அகல்விளக்கு |



www.TeacherTN.com

| | | |
|---|---|---|
| **குறைதீர் கற்பித்தல்** | – | தவறாக விடையளிக்கும் மாணவர்களுக்குப் படத்தொகுப்புக் கொண்டு மீளக் கற்பித்து, மீண்டும் கொடுத்து மதிப்பீட்டுச் செயல்பாட்டை மேற்கொள்க. |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | 2 |
| **பாட எண்** | – | 5 |
| **பாடத்தலைப்பு** | – | பார்ப்போம்! படிப்போம்! |
| **இலக்கு / திறன்** | – | சொற்களைச் சொல்லக்கேட்டு எழுதுக. |
| **நோக்கம்** | – | சொற்களைக் சொல்வதனைக் கேட்டு எழுதும் திறன் பெற்றுள்ளார்களா என்பதனை மதிப்பிடுதல் |
| **கால அளவு** | – | 15 நிமிடங்கள். |
| **செயல்பாடு** | – | கேட்பேன்! எழுதுவேன்!<br>தனியாள் செயல்பாடு – வளரறி மதிப்பீடு (ஆ) |
| **செயல்படுத்தும் முறை** | – | . ஆசிரியர் 10 சொற்கள் கொண்ட சொல் தொகுப்புகளை உருவாக்கிக் கொள்க.<br>. மாணவர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கிய பிறகு ஒவ்வொரு சொல்லாக, தெளிவாக ஒலிக்க.<br>. ஆசிரியர் கூறும் சொற்களை மாணவர்கள் தனித்தாளில் எழுதி ஆசிரியரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.<br>. உரிய விடைகளுக்கேற்ப ஆசிரியர் மதிப்பெண்கள் வழங்குக. |
| **குறைதீர் கற்பித்தல்** | – | உரிய விடையளிக்காத மாணவர்களை அழைத்து மாணவர்களுக்கேற்பப் பயிற்சி வழங்குக. அதன்பிறகு சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதச் செய்க. |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | 3 |
| **பாட எண்** | – | 4 |
| **பாடத்தலைப்பு** | – | மகிழ்ச்சி உலகம் |
| **இலக்கு / திறன்** | – | எழுதுதல் |
| **நோக்கம்** | – | படத்தைப் பார்த்துச் சிறு தொடர்கள் எழுதுதல் |
| **கால அளவு** | – | 20 நிமிடங்கள் |
| **செயல்பாடு** | – | படம் பார்த்துத் தொடர் எழுதுக.<br>தனியாள் செயல் – வளரறி மதிப்பீடு (ஆ) |
| **வகுப்பறையில் செயல்படுத்தும் முறை** | – | ஆசிரியர் பாடப்புத்தகத்தில் உள்ள படத்தினையோ இயற்கைக் காட்சிகள் அமைந்த படத்தினையோ மாணவரின் பார்வைக்கு வைத்து, அதனைப்பார்த்துச் சிறுசிறு தொடர்களை எழுத வைத்தல். |
| **மதிப்பீடு** | – | பொருத்தமானதா என மதிப்பிடுக. |
| **குறைதீர் கற்பித்தல்** | – | எழுத இயலாத மாணவனுக்குக் படநிகழ்வைக் கூறிப் புரிந்துகொள்ளச் செய்தபிறகு மதிப்பிடுக. |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | 3 |
| **பாட எண்** | – | 5 |
| **பாடத்தலைப்பு** | – | மல்லிகை உணவகம் |
| **இலக்கு / திறன்** | – | எழுதுதல் |
| **கற்றல் நோக்கம்** | – | சொற்றொடர்களை/அறிவிப்புகளை இடைவெளிவிட்டு எழுதுதல் |
| **கால அளவு** | – | 1 நாள் |
| **செயல்பாடு** | – | தனியாள் செயல் – வளரறி மதிப்பீடு (அ) |
| **வகுப்பறையில் செயல்படுத்தும் விதம்** | – | நூலகம், கோவில், திரையரங்கு, பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் இடம் பெற்றிருக்கும் அறிவிப்புகளை உரிய இடைவெளிவிட்டு எழுதி வரச் செய்தல் |



www.TeacherTN.com

| | | |
|---|---|---|
| **மதிப்பீடு** | – | முறையாக எழுதிய மாணவர்களுக்கு உரிய மதிப்பெண்கள் வழங்குக. |
| **குறைதீர் கற்பித்தல்** | – | மீளக் கற்பித்தல் |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | 4 |
| **பாட எண்** | – | 3 |
| **பாடத்தலைப்பு** | – | திணை |
| **இலக்கு / திறன்** | – | நடைமுறை இலக்கணம் |
| **நோக்கம்** | – | திணை வேறுபாடுகளை அறிந்து கொண்டார்களா என்பதனை மதிப்பிடுதல். |
| **கால அளவு** | – | ஒரு பாடவேளை |
| **செயல்பாடு** | – | செயல்திட்டம்– படத்தொகுப்பு உருவாக்குதல்<br>தனியாள் செயல் – வளரறி மதிப்பீடு (அ) |
| **வகுப்பறையில் செயல்படுத்தும் முறை** | – | கிடைக்கும் படங்களைக் கொண்டு உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்தி மாணவர்களைப் படத்தொகுப்புத் தயாரித்து வரச் செய்க. |
| **மதிப்பீடு** | – | படத்தொகுப்பினைப் பார்வையிட்டு மாணவர்களுக்கு உரிய மதிப்பெண் வழங்குக. |
| **குறைதீர் கற்பித்தல்** | – | முறையாகச் செய்யாத மாணவர்களை அடையாளம் கண்டு மீண்டும் பயிற்சி அளித்துப் படத்தொகுப்பை உருவாக்கச் செய்க. |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | – | 4 |
| **பாட எண்** | – | 5 |
| **பாடத்தலைப்பு** | – | 5. விண்ணப்பம் எழுதுவோம் |
| **இலக்கு / திறன்** | – | எழுதுதல் |
| **நோக்கம்** | – | அஞ்சல் அட்டை / அஞ்சல் உறையில் விண்ணப்பம் எழுத அறிந்துள்ளார்களா என்பதனை மதிப்பிடுதல். |
| **கால அளவு** | – | 15 நிமிடங்கள் |
| **செயல்பாடு** | – | விண்ணப்பம் எழுதுதல்<br>தனியாள் செயல் – வளரறி மதிப்பீடு (அ) |
| **வகுப்பறையில் செயல்படுத்தும் முறை** | – | வீட்டு முகவரி, பள்ளி முகவரி அமையுமாறு விண்ணப்பம் எழுதச் செய்க. |
| **மதிப்பீடு** | – | அஞ்சல் அட்டை /உறையில் வீட்டு முகவரி, பள்ளி முகவரி அமைத்து விண்ணப்பம் எழுத அறிந்துள்ளனரா என்பதனைக் கருத்திற்கொண்டு உரிய மதிப்பெண் வழங்குக. |
| **குறைதீர் கற்பித்தல்** | – | முறையாக எழுத இயலாத மாணவர்களுக்கு வாய்மொழியாகப் பயிற்சியளித்து, மீண்டும் விண்ணப்பம் எழுதச் செய்க. |



www.TeacherTN.com

வகுப்பு – 5
இயல் – 1
பாடத் தலைப்பு – உரைநடை – எனக்கு இறக்கைகள் முளைத்தால்...
இலக்கு /திறன் – பேசுதல்
நோக்கம் – மாணவர்களின் கற்பனைத் திறனையும் தலைப்பிற்கு ஏற்றவாறு பேசும் திறனையும் மதிப்பிடுதல்..
கால அளவு – 10 நிமிடங்கள்
செயல்பாடு – தனியாள் செயல்– வளரறி மதிப்பீடு (அ)

**வகுப்பறையில் செயல்படுத்தும் முறை**

நீ பறவையாக மாற நினைத்தால் எந்தப் பறவையாக மாற விரும்புவாய் ? ஏன் ? எங்கெங்குச் செல்ல விரும்புவாய் ? இவை போன்ற கற்பனையான தலைப்புகளில் பேசச் செய்க.

**மதிப்பீடு**

தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசியமுறை , சொற்களைப் பயன்படுத்திய முறைக்கு ஏற்ப மதிப்பெண் வழங்கவும்.

**குறைதீர் கற்பித்தல்**

முறையாகச் செய்ய இயலாத மாணவர்களுக்கு ஆர்வமூட்டிப் பிறகு பேசச் செய்க.

வகுப்பு – 5
இயல் – 2
பாடத் தலைப்பு – உரைநடை – செம்மொழியாம் தமிழ் மொழி
இலக்கு / திறன் – படைப்பாற்றல் திறன்
நோக்கம் – படைப்பாற்றல் திறனை அளவிடல்
கால அளவு – 30 நிமிடங்கள்
செயல்பாடு – எழுதுதல் குழுச் செயல் – வளரறி மதிப்பீடு (அ)

**வகுப்பறையில் செயல்படுத்தும் முறை**

மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் பள்ளி ஆண்டு விழா, இலக்கிய மன்ற விழா, விளையாட்டு விழா, தமிழ் மன்றத்தொடக்க விழா முதலிய தலைப்புகளைக் கொடுத்து, அதற்கான அழைப்பிதழ்களைக் குழுவில் கலந்துரையாடி உருவாக்கச் செய்க.

**மதிப்பீட்டுக் கூறுகள்** சிறப்பாகச் செயல்பட்ட குழுவிற்கு உரிய மதிப்பெண் வழங்குக.

**குறைதீர் கற்பித்தல்**

உருவாக்க இயலாத குழுவுக்கு மாதிரி அழைப்பிதழ்களைக் கொடுத்து, அதனைப்போலஉருவாக்க ஆசிரியர் உதவி செய்க.


www.TeacherTN.com

## பாடநூல் செயல்பாடுகள் – பட்டியல்
## முதல்வகுப்பு– வளரறி மதிப்பீடு (அ) FA (a)

| வ. எண் | பாட எண் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 5 | பொருத்தமான நிழலைக் கண்டு பிடிப்பேன் | படத்தை உற்று நோக்கி, உரிய நிழல் படத்தைக் குறியிட்டுக் காட்டச் செய்க. |
| 2 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 5 | பூனை, பாலைக் குடிப்பதற்கு வழி காட்டுவேன். | படத்தை உற்றுநோக்கிப் பூனை எந்த வழியில் சென்றால் பாலைக் குடிக்கும் எனக் குறிக்கச் செய்க. |
| 3 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 6 | புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுவேன். | மாணவர்களைப் படத்தை உற்று நோக்கிப் புள்ளிகளை இணைத்து, முழு உருவம் கொண்ட பழம் உருவாக்கச் செய்க.அதற்கு வண்ணம் தீட்டச் செய்க. |
| 4 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 6 | விடுபட்டதனை வரைந்து வண்ணம் தீட்டுவேன். | படத்தில் விடுபட்டதனை உற்றுநோக்கி, வரைந்து, வண்ணம் தீட்டச் செய்க. |
| 5 | 2. என் பந்து | 9 | உன் குடும்பத்தினர் புகைப்படத்தை ஒட்டுக. அவர்களைப்பற்றிக் கூறுக. | குடும்ப உறுப்பினர்களின் படத்தைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் ஒட்டச் செய்க.( அ ) குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைச் சொல்லி/ வரைந்து அவர்களைப்பற்றிக் கூறச் செய்க. |
| 6 | 2. என் பந்து | 15 | நானே பேசுவேன். | மாணவனுக்குப் பிடித்த விளையாட்டைப் பற்றிக் கூறச்செய்க. |
| 7 | 2. என் பந்து | 16 | சொல் உருவாக்குவேன். | சுழல் அட்டை ஒன்றனைஉருவாக்கி, அவ்வட்டையில் இடம்பெற்றுள்ள எழுத்துகளைக்கொண்டு, மாணவர்களைச் சொல் உருவாக்கச் செய்க. |
| 8 | 2. என் பந்து | 17 | படத்திலுள்ள செயல்களைப் பற்றிக் குழந்தைகளைக் கூறச் செய்க. | படத்திலுள்ள செயல்களைக் குழந்தைகள் அனைவரையும் கூறச் சொல்லவும், |
| 9 | 2. என் பந்து | 19 | வண்ணம் தீட்டுவேன். | படத்திலுள்ள உருவத்திற்கு மாணவர்களுக்குப் பிடித்த வண்ணத்தைத் தீட்டச் செய்க. |
| 10 | 3. செல்லக்குட்டி | 24 | நான் பேசுவேன். | மாணவனின் ஊரில் நடந்த விழாக்களைப் பற்றிக் கூறச்செய்க. |



www.TeacherTN.com

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 3. செல்லக்குட்டி | 26 | சொல் உருவாக்குவேன். | சுழல் அட்டையில் உள்ள எழுத்துகளைப் படித்துக் கோடிட்ட இடத்தில் சொற்களை உருவாக்கி எழுதச் செய்க. |
| 12 | 3. செல்லக்குட்டி | 27 | தெரியாத எழுத்தை வட்டமிட்டு நீக்கி எழுதுவேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் தெரியாத எழுத்தை வட்டமிட்டு நீக்கி, உரிய சொற்களை எழுதச் செய்க. |
| 13 | 3. செல்லக்குட்டி | 27 | பிடித்தது எது ? அதுவாக மாறுவேன். | குழந்தைகளுக்குப் பிடித்ததனைக் கேட்டு அதுவாக மாறி நடிக்கச் செய்க. |
| 14 | 3. செல்லக்குட்டி | 27 | உருவங்கள் செய்வோம் | குழந்தைகளிடம் சீனக்களிமண் கொடுத்து, அவர்களுக்குப் பிடித்த உருவம் உருவாக்கச் செய்க. |
| 15 | 4.காய் ! காய் ! | 37 | படத்திற்குரிய வண்ணம் தீட்டுக. | படத்தைப் பார்த்து உரிய வண்ணம் தீட்டச் செய்க. |
| 16 | 4.காய் ! காய் ! | 38 | ஒளிந்துள்ள சொற்களைக் கண்டுபிடிப்பேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்கச் செய்க. |
| 17 | 4.காய் ! காய் ! | 39 | இடை எழுத்தை மாற்றிப் புதிய சொல்லை உருவாக்குவேன். | கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் உள்ள ஓர் எழுத்தை மாற்றிப் புதிய சொல்லை உருவாக்கச் செய்க. |

## முதல் வகுப்பு வளரறி மதிப்பீடு (ஆ) FA (b)

| வ. எண் | பாட எண் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 2. என் பந்து | 15 | செய்தித்தாளைக் கொடுத்துத் தெரிந்த எழுத்துகளை வட்டமிடச் செய்யவும். | வகுப்பில் உள்ள மாணவர்களிடம் தமிழ்ச் செய்தித்தாளைக் கொடுத்து, அவன் கற்றுக் கொண்ட எழுத்தை வட்டமிடச் செய்க. |
| 2 | 2. என் பந்து | 15 | நானே நிரப்புவேன். | கொடுக்கப்பட்ட படத்தை உற்றுநோக்கி விடுபட்டுள்ள கட்டத்தில் உரிய எழுத்தை எழுதச் செய்க. |
| 3 | 2. என் பந்து | 16 | சொற்களைச் சேர்த்து எழுதுவேன் | கொடுக்கப்பட்டுள்ள இரண்டு சொற்களை இணைத்து ஒரு புதிய சொல் உருவாக்கச் செய்க. |
| 4 | 2. என் பந்து | 16 | வேறுபட்டதனைக் குறியிடுவேன் | வட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்தை உற்றுநோக்கி, வட்டத்தில் உள்ள எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு தொடங்காத சொல்லை வட்டமிடச் செய்க. |
| 5 | 2. என் பந்து | 18 | படத்தின் பெயரைக் கோடிட்டு இணைக்க | படத்தைப் பார்த்து அதற்கு உரிய பெயரைக் கோடிட்டு இணைக்கச் செய்க. |


www.TeacherTN.com

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 2. என் பந்து | 17 | சொற்களைப் படிக்கச் செய்க. | படத்திலுள்ள சொற்களைப் படிக்கச் செய்க. |
| 7 | 2. என் பந்து | 18 | படத்தின் முதல் எழுத்தை எழுதுக. | கொடுக்கப்பட்ட படத்தை உற்றுநோக்கி விடுபட்டுள்ள கட்டத்தில் உரிய எழுத்தை எழுதச் செய்க. |
| 8 | 2. என் பந்து | 19 | வெற்றுக் கட்டங்களை நிரப்புக. | கொடுக்கப்பட்டுள்ள சொற்களை உரிய கட்டத்தில் நிரப்பச் செய்க. |
| 9 | 3. செல்லக்குட்டி | 26 | சொற்களை வகைப்படுத்துவேன் | கொடுக்கப்பட்டுள்ள ஒத்த ஓசைச் சொற்களை வகைப்படுத்தச் செய்க. |
| 10 | 3. செல்லக்குட்டி | 24 | நான் நிரப்புவேன். | படத்தில் உள்ள உருவத்தை உற்று நோக்கிக் கட்டத்தில் உள்ள விடுபட்ட எழுத்தை எழுதச் செய்க. |
| 11 | 4.காய் ! காய் ! | 35 | எழுத்துக்களை இணைத்துச் சொல் உருவாக்குவேன் | கொடுக்கப்பட்டுள்ள எழுத்தைப் படித்து, வட்டத்தில் உள்ள எழுத்துடன் இணைத்துப் புதிய சொல் உருவாக்கச் செய்க. |
| 12 | 4.காய் ! காய் ! | 37 | துணை எழுத்தைச் சேர்த்து எழுதுவேன் | கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் துணை எழுத்தை இணைத்துப் புதிய சொல் உருவாக்கச் செய்க. |
| 13 | 4.காய் ! காய் ! | 37 | படத்தைப் பார். உரிய சொல்லை எடுத்து எழுதுக | கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, அதற்குக் கீழே உள்ள இரண்டு கட்டங்களில் உள்ள சொற்களைப் படித்துப் பார்த்து, உரியவற்றை எடுத்து எழுதச் செய்க. |
| 14 | 4.காய் ! காய் ! | 38 | படத்திற்குரிய சொல்லை எடுத்து எழுதுவேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் படித்துப் பார்த்துப் படத்துக்குரிய சொல்லை எடுத்துக் கட்டத்தில் எழுதச் செய்க. |
| 15 | 4.காய் ! காய் ! | 39 | கோடிட்ட இடத்தில் 'ன'கர எழுத்தை எழுதுவேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் எந்த இடத்தில் புள்ளி வைக்கப்பட்டுள்ளதோ அந்த இடத்தில் 'னகர' எழுத்தை நிரப்பிச் சொற்களைப் பொருள்படும்படி அமைக்கச் செய்க. |
| 16 | 4.காய் ! காய் | 34 | அறிந்த எழுத்துகளை வட்டமிடுவேன் | மாணவர்களை அறிந்த எழுத்துகளை உற்றுநோக்கி வட்டமிடச் செய்க. |
| 17 | 4.காய் ! காய் ! | 36 | எழுத்துகளை முறைப்படுத்திச் சொல்லாக்குவேன் | கட்டத்தில் உள்ள எழுத்துகளைப் படித்துணர்ந்து முறைப்படுத்திச் சொல் உருவாக்கச் செய்க. |
| 17 | 4.காய் ! காய் ! | 36 | அறிந்த எழுத்தை வட்டமிடுவேன். வட்டமிடாத எழுத்துகளைப் படித்து எழுதுவேன். | மாணவர்கள் அறிந்த எழுத்துகளை வட்டமிடச் செய்க. வட்டமிடாத எழுத்துக்களைப் படித்து எழுதச் செய்க. |



www.TeacherTN.com

# இரண்டாம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (அ) FA (a)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | பசுவும் கன்றும் | 4 | இ) நிரப்புக<br>விலங்குகள், பறவைகள் பற்றிய பாடல்களைக் கேட்டறிந்து பாடுக. | விலங்குகள், பறவைகள் பற்றிய பாடல்களைப் பாடச் செய்க. |
| 2 | பசுவும் கன்றும் | 4 | ஈ) விரலில் மையைத் தொட்டு அச்சிட்டு மகிழ்க.<br>உ) கொடுக்கப்பட்ட சொற்களுக்கேற்ப விரலில் மை தொட்டு அச்சிடுக.<br>ஊ) விரலில் வண்ண மையைத் தொட்டு விருப்பம்போல் அச்சிட்டு மகிழ்க. | பேனா மையை மாணவர்களுக்கு வழங்கி விரல் தொட்டு அச்சிடச் செய்க. |
| 3 | பந்து எங்கே ? | 6<br>7 | அ) படங்களுக்கு வரிசை எண் இடுக.<br>கதை நிகழ்வைக் கூறி மகிழ்க.<br><br>ஆ) வண்ணம் தீட்டி மகிழ்க. | படங்களுக்கு வரிசை எண் இடச் செய்க.<br><br>வண்ணம் தீட்டச் செய்க. |
| 4 | தவளையின் தந்திரம் | 14 | – கதை நிகழ்வைக் கூறி மகிழ்க.<br>– பெற்றோரிடமிருந்து எளிய கதையைக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக. | எளிய கதைகளை வகுப்பறையில் கூறச் செய்க. |
| 5 | பார்ப்போம் படிப்போம் | 18 | ஆ) பள்ளிக்குச் செல்லும் வழியில் நீ பார்த்த பொருள்களின் பெயர்களை எழுதுக. | பள்ளிக்குச் செல்லும் வழியில் பார்த்த பொருள்களின் பெயர்களை எழுதச் செய்க. |
| 6 | என்னைப் பற்றி நானே | 27 | இ) இவை பேசினால், தம்மை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்ளும் ? | கூறச் செய்க. |
| 7 | சேவல் கூவுது | | பறவைகள், விலங்குகள் பற்றிய பாடல்களைப் பாடுக. | பறவைகள், விலங்குகள் பற்றிய பாடல்களைப் பாடச் செய்க. |
| 8 | வழி பிறந்தது | 33 | நீ பிறருக்கு உதவி செய்திருக்கிறாயா ? என்ன உதவி ? யாருக்கு ?கூறுக. | கூறச் செய்க. |
| 9 | வழி பிறந்தது | 36 | ஐ) கட்டங்களை நிரப்புக, இரண்டாவது எழுத்தை நீக்கிப் புதிய சொல்லை உருவாக்குக. | எழுதச் செய்க. |


www.TeacherTN.com

# இரண்டாம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (ஆ) FA (b)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | பசுவும் கன்றும் (1) | 4 | அ) குறு வினா<br><br>ஆ) பொருள்அறிக.<br><br>இ) நிரப்புக. | ஆசிரியர் பாடலைப்பாடி, மாணவர்களை உற்று நோக்கச் செய்க.<br>பிறகு பாடலைக் கேட்டுப் புரிந்து கொண்டுள்ளனரா என்பதனை அறிய வாய்மொழியாக வினாக்கள் கேட்டு விடை கூறச் செய்க.<br><br>வாய்மொழியாக விடை கூறச் செய்க. |
| 2 | பந்து எங்கே ? (2) | 7 | படங்களுக்கு வரிசை எண் இடுக. | படத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளைப் பார்த்து வரிசை எண்களை இடச் செய்க.<br>ஒரு மாணவனை, ஆசிரியர் கூறிய கதையின் முதல் நிகழ்வினைக் கூறச் செய்து, பிற மாணவர்களை அதற்குரிய படம் எது எனக் கண்டறிந்து எண்ணை இடச் செய்க. |
| | | | நினைவு கூர்க.<br>சொல்லிக்கொண்டே எழுதுக<br>சொல்லக் கேட்டு எழுதுக. | கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களைப் பார்த்து உரிய ஒலிப்புடன் சொல்லிக் கொண்டே எழுதச் செய்தல்.<br>ஆசிரியர் எழுத்தை உரிய முறையில் ஒலிக்க மாணவர்கள் அதனைக் கேட்டு எழுதச் செய்க. |
| | | 8 | தமிழ் நெடுங்கணக்கு வரிசை அறிக. | மாணவர்களை உயிர்எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் இரண்டும் சேர்த்து ஒலிக்கும்போது உயிர்மெய் எழுத்துகள் உருவாவதனை அறியச் செய்க.<br>உயிர்மெய் எழுத்துகளின் வரிசைமுறையினை அறியச் செய்க. எழுத்துக்களை வரிசைமுறையில் எழுதச் செய்க. |
| 3 | யார் ? யார் ? யார் ? (3) | 9 | அ) வாய்மொழி விடை தருக.<br><br>ஆ) பொருள் அறிக.<br><br>இ) எதிர்ச்சொல் அறிக. | பாடலைப் பாடிக் காட்டிய பின் மாணவர்கள் பாடலின் பொருளை அறிந்துள்ளனரா என்பதனைச் சிறுசிறு வினாக்களைக் கேட்டு அறிந்து கொள்ளச் செய்க.<br>வினாக்களுக்கு உரிய விடைகளை வாய்மொழியாகக் கூறச் செய்க. விடைகளை வாய்மொழியாகச் கூறச் செய்க. |
| 4 | பார்ப்போம் படிப்போம் (5) | 16 | ஏ. உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக. | படத்தைப் பார்த்துக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை (பெயர்களை) உரிய ஒலிப்புடன் படித்துக்காட்டி மாணவர்களைச் சொல்லச் செய்தல்.<br>ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே படிக்கச் செய்க. |
| 5 | பார்ப்போம் படிப்போம் (5) | 17 | ஏ. படத்துடன் பெயரைப் பொருத்துக. | ஆசிரியர் படங்களைக் காட்டிப் பெயர்களைக் கூறச் செய்க. கொடுக்கப்பட்ட பெயர்களைப் படித்துக் காட்டி உரிய படங்களுடன் கோடுகளால் இணைக்கச் செய்க. |
| 6 | | 18 | அ. படம் பார்த்துப் பெயர் எழுதுக. | ஆசிரியர் பெயர்களைப் படித்துக் காட்டி, ஒவ்வொரு பெயரைப் படிக்கும்போதும் அதற்குரிய படத்திற்கு நேரே அந்தப் பெயரை எழுதச் செய்க. |
| 7 | | 20 | இ) சொற்றொடரைப் படித்துப் பழகுக. | கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடரைப் படிக்கச் செய்க. |



www.TeacherTN.com

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | பார்ப்போம் படிப்போம் | 22 | உ) படங்களின் பெயர்களை உரிய கட்டங்களில் நிரப்புக. | படங்களின் பெயர்களை உரிய கட்டங்களில் நிரப்பச் செய்க. |
| 9 | பார்ப்போம் படிப்போம் | 24 | ஊ) விடுகதைக்கு விடை கூறுக. | வாய்மொழியாகக் கூறச் செய்க. |
| 10 | | 22 | உ) சொற்களை உரிய கட்டங்களில் நிரப்புக. | ஆசிரியர், மாணவர்களிடம் பயிற்சியில் கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயர்களை ஒவ்வொருவராகக் கூறச் செய்க. அப்பெயர்களைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் உரிய வழிகாட்டுதலின்படி நிரப்பச் செய்க. |
